

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, அண்ணாநகர் மண்டலம், வார்டு95க்குட்பட்ட வில்லிவாக்கம், அகத்தியர் நகர், பி பிளாக் 26வது தெருவில் ரூ.20.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் சுதா தீனதயாளன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமை! மேயர் வசந்தகுமாரி–கோ.காமராஜ்,டி.காமராஜ், எஸ்.இந்திரன் பங்கேற்பு!**

## தாம்பரம் வர்த்தகர் அணி இரா.செல்வகுமார் இல்ல மணவிழா!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.– அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன்– அன்பில் மகேஸ் பொய்யாமொழி– கோவி.செழியன் மற்றும் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்து!

தாம்பரம், ஆக, 26-

தாம்பரம் மாநகரக் கழக வர்த்தகர் அணி துணை அமைப்பாளரும், முன்னாள் நகரமன்ற உறுப்பினருமான இரா.செல்வகுமாரின் சகோதர் எஸ்.சுரேஷ், எஸ்.சசிதேவி ஆகியோரின் புதல்வர் எஸ்.குற்றாலீஸ்வரன், ஐ.தினகரன்-டி.ஜெகதேவி ஆகியோரின் புதல்வி டி.ஹனிதேவி ஆகியோரின் மணவிழா 27.8.2025 புதன்கிழமை அன்று காலை 7 மணிக்கு சென்னை இராயபுரம், எம்.சி. ரோட்டில் உள்ள காமாட்சி அம்மன் கோவிலில் நடைபெறுகின்றது.



அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி வருகிற 30.8.2025-சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு, மேற்கு தாம்பரம் இராஜகோபாலா திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பிற்கு மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர். மண்டலக் குழுத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணமக்களை கழகப் பொருளாளர் -மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் முனைவர் கோவி.செழியன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பல்லாவராம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., கவிஞர் காசி முத்துமாணிக்கம், மீ.அ.வைத்திய லிங்கம், ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி, ஆதி மாறன், ஆ.மனோகரன்,அ.தமிழ்மாறன், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, எஸ்.சேகர், த.ஜெய்குமார், ஆ.நடராஜன், ஆர்.சுரேஷ், ஏ.கே. கருணாகரன், இ.எஸ்.பெர்னட், ஜி.கே. விவேகானந்தன் என்கிற ரவி, கோல்டு டி.பிரகாஷ் , பேராசிரியர் எல்.பிரபு உள்பட மண்டலக்குழுத் தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், கழக முன்னணியினர், தோழர்கள் கலந்து கொண்டு மணமக்கள் எஸ்.குற்றாலீஸ்வரன், டி.ஹனிதேவி ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

எஸ்.மகேஷ் நன்று கூறிகிறார். மணவிழாவிற்கு வருகை தருவோரை இரா.செல்வகுமார், எஸ்.சுரேஷ், சசிதேவி சுரேஷ், எஸ்.ராஜேந்திரன், எஸ்.மகேஷ், எஸ்.விஜய், எஸ்.செல்வபிரகாஷ், டாக்டல் எஸ்.விக்னேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

**காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., – நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு**

## மதுரவாயல் 152வது வட்டத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம்!

### வட்டப் பொறுப்பாளர் ஜெ.பாஸ்கரன் அறிக்கை!

சென்னை, ஆக. 26,

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 152வது வார்டில் (28.08.2025 வியாழக்கிழமை) அன்று காலை 8:00 மணிக்கு உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் 11 - மண்டல அலுவலகம் அருகில் அம்பேத்கர் விளையாட்டு திடல், வளசரவாக்கத்தில் நடைபெறுகிறது.

மதுரவாயல் தெற்கு பகுதிச் செயலாளர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் திரு. க.கணபதி MLA அவர்கள் துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி 11-வது மண்டல குழுத் தலைவரும், மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளருமான நொளம்பூர் வே.ராஜன் மதுரவாயல் தெற்கு பகுதி துணை செயலாளரும் 152வது வார்டு மாமன்ற உறுப்பினருமான S.பாரதி அண்ணாவேலவன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கே.நாராயணன் ஜி. மன்மதராஜ் சி. நல்லதம்பி வி. திலகவதி இரா.கோதண்டம் எஸ்பிஜி.பிரபு கே. பாண்டீஸ்வரி ஜி. ஜான்பீட்டர் ஆர்.வி.கே. தமிழ்மாறன் AL. இராமு வி.அற்புதநாதன் எம்.ஆல்பர்ட் எஸ். அப்பன் (எ) சத்தியமூர்த்தி எல்.மகேஷ்குமார் கே.பீர்முகமது டி.சத்தியசீலன் எஸ். கார்த்திகேயன் டி.ராஜேஷ் பி.எம். சம்பத்குமார் பா.சிவகுமார் PMK. பிரபா ஏ.சதீஷ் கண்ணன் பி.அருண்ராஜ் கே.சோமசுந்தரம் எஸ்.சரவணன் எம்.சுதாகர் எஸ். பிரேமா எஸ்.சேவியர் ராணி எம்.கிரி (எ) கணேசன் எஸ்.ஸ்ரீவர்சன் ஏ. சூர்யா ஏ.முனுசாமி ஏ. அருள்தாஸ் டி.வெங்கடேசன் ஜி.அடிசன் கே. விஜயகுமார் ஆர்.ராஜ்குமார் கே.நரசய்யா கே.வாசுதேவன் மற்றும் வட்டத்திற்கு உட்பட்ட BLA2, BDA, பாக இளைஞரணி, கழக முன்னோடிகள் பங்கேற்கின்றனர். இந்த முகாமில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு 152வது வட்ட கழகப் பொறுப்பாளர் ஜெ.பாஸ்கரன் கேட்டுக் கொள்கிறார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தின் பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல். மாவட்ட பொறுப்பாளர். எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் தலைமையில் நடைபெற்றது. நேர்காணல் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் முனைவர் சி.பிரதீப் நடத்தினார். மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் ஆரணி எஸ். ரோஸ் பொன்னையன் வரவேற்றார். இதில் பி.ஜெ. மூர்த்தி, மு.பகலவன், உமாமகேஷ்வரி, டி.கே சந்திரசேகர், மு.முரளிதரன், ஆ. ராசா, வே.ஆனந்த்குமார், ஆ. சத்தியவேலு, ஜி.ரவிகுமார், பி. முத்து, இரா. அறிவழகன், தமிழரசன், மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் மோ.பிரசாத், துளசிராமன், தமிழ்பிரியன், ஆர், காண்டிபன். சி. மணிகண்டன், கே. ஆர். விக்கி மற்றும்.ஜெகன், சுல்தான், பிரபாகர், தீபன், சூர்யா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4ல் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மருத்துவ உபகரணங்களை பயனாளிகளுக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா வழங்கினார் உடன் மேயர் திருமதி வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் டி. காமராஜ், 4 வது மண்டல குழு தலைவர் டி. காமராஜ் , 56 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர், பகுதி செயலாளர் எஸ் .சேகர், எம் .சி, 55 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பகுதி துணைச் செயலாளர் பி. புகழேந்தி ,எம். சி, மற்றும் கழக முன்னோடிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

**தமிழ்நாட்டில் முதன்முறையாக சென்னை மாநகராட்சியில்**

## பொதுமக்களுக்கு ‘வாட்ஸ் அப்’ வாயிலாக சேவைகள்!

### மேயர் திருமதி ஆர். பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.26-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை உள்கட்ட அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களும் பொதுமக்களுக்கான சேவைகளும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், மக்களுக்கான சேவைகள் சிறந்த முறையில் கிடைத்திட தகவல் தொழில்நுட்ப பணிகள் சிறப்பாக கட்டமைக்கப்பட்டு, அதன் வாயிலாக உயர்வான டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இ ஆபிஸ் வழியிலான அலுவலக செயல்பாடுகள்,

இ டெண்டர், திட்டப் பணிகள் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை, ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் டிஜிட்டல் பரிவர்த்தனை என வெளிப்படையான நிர்வாகத்தினையும், வேகமான செயல்பாட்டினையும் மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்களுக்கான சேவைகள் தற்போது நம்ம சென்னை செயலி, மாநகராட்சியின் இணைய தளம் (www.chennaicorporation.gov.in), 1913 அழைப்பு மையம், சமூக வலைதளங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேயர் அவர்கள் 2025-26ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்களுக்கான சேவைகள் அனைத்தும் WhatsApp வாயிலாக வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்படும் பொதுமக்களுக்கான சேவைகள் அனைத்தும் WhatsApp வாயிலாக வழங்கப்படும் செயல்பாட்டினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (25.08.2025) ரிப்பன் கட்டட வளாக அலுவலகக் கூட்டரங்கில் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

இதற்கான WhatsApp Chatbot ஆனது சிறந்த டிஜிட்டல் தொழில்நுட்பத்தில், நிபுணர்களின் ஆலோசனைகளை மேற்கொண்டு, மக்கள் மிக எளிதாகப் பயன்படுத்தும் வகையில் செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டுடன் உருவாக்கப்பட்டுள்ளது

பெருநகர சென்னை மாநகராட்சியின் சேவையினைப் பெற தற்போது உருவாக்கப்பட்டுள்ள 9445061913 என்கிற WhatsApp எண்ணை பொதுமக்கள் தங்கள் கைபேசியில் முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும் இதனைத் தொடர்ந்து இந்த WhatsApp Chatbot எண்ணிற்கு Hi அல்லது ‘வணக்கம்’ என பதிவிட வேண்டும். பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சேவைகளை அதில் உள்ள உரிய வழிகாட்டலுடன் உள் நுழைந்து பெற்றிட வேண்டும்.

இதில் பிறப்பு மற்றும் இறப்புச்சான்றிதழ் தொடர்பான சேவைகள், சொத்துவரி செலுத்துதல், புகார் பதிவு, தொழில் வரி செலுத்துதல், வர்த்தக உரிமம் செலுத்துதல் மற்றும் புதுப்பித்தல், ஆவண பதிவிறக்கம், சமுதாயக்கூடம் முன்பதிவு, முதல்வர் படைப்பகம் தொடர்பான சேவைகள், நீச்சல் குளம் முன்பதிவு, செல்லப்பிராணிகளின் உரிமம் பதிவு, பொதுமக்கள் குறைதீர்க்கும் சேவைகள், நகரமைப்பு தொடர்பான சேவைகள், விண்ணப்பங்கள் கண்காணிப்பு, கடை வாடகை செலுத்துதல், கட்டடம் மற்றும் கட்டுமானக் கழிவுகள் தொடர்பான பதிவு உள்ளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் 32 வகையான சேவைகளை மக்கள் எவ்வித அலைச்சலுமின்றி தாங்கள் இருந்த இடத்திலிருந்து இந்த WhatsApp Chatbot வாயிலாகப் பெற்றிட முடியும்.

இந்த WhatsApp Chatbot-னை மக்கள் எளிதாகப் பயன்படுத்தும் விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உரையாட முடியும்.

மேலும் இந்த WhatsApp Chatbot-ல் பிற தகவல் சேவைகளாக, மண்டல அலுவலகம், வார்டு அலுவலகம் கண்டறிதல், அருகில் உள்ள வசதிகளைத் தெரிந்து கொள்ளுதல், பள்ளிக் கூடங்கள், கழிப்பிடங்கள், பேருந்து நிறுத்துமிடங்கள், அம்மா உணவகம், மயான பூமி, சமுதாயக்கூடம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், நகர்ப்புற சமூக சுகாதார மையம், படிவங்கள் பதிவிறக்கம், அடுத்தடுத்து கேட்கப்படும் கேள்விகள் உள்ளிட்ட சேவைகளையும் பெற முடியும். மேலும், இதில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த சேவைகளில் பொழுதுபோக்கு வரி மற்றும் சுகாதாரச் சான்றிதழ் சேவைகளும் புதிதாக சேர்க்கப்பட்டு அதன் சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

இந்த WhatsApp Chatbot மூலம் மக்களுக்கான சேவைகளை எளிதாகப் பெறுதல்,

24/7 சேவை கிடைக்கும் வசதி, இதனைப் பயன்படுத்துவதற்கான இயல்பான உரையாடல், எவ்வித கால தாமதமும் அலைச்சலுமின்றி மக்கள் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே இந்த சேவைகளைப் பெறுதல் ஆகியன குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்டமாக இந்த WhatsApp Chatbot-ல் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் பதிவுத்துறை (TNREGIET) ஆகியவற்றின் சேவைகளையும் மக்களுக்கு வழங்கிடும் வகையில் கூடுதலான சேவைகள் இதில் விரிவாக்கம் செய்யப்படும்.




மேயர் அவர்கள் 2025–26ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களின் தேவைகளுக்கான அனைத்து சேவைகளையும் WhatsApp வாயிலாக வழங்கிடும் செயல்பாட்டினை மேயர் ஆர் பிரியா நேற்று (25.08.2025) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், அரசு ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ்வாறாக தமிழ்நாட்டில் முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் இருக்கும் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த WhatsApp chatbot சேவையானது மக்களுக்கு எளிதாக கிடைக்கப்பெற்று அவர்களுடன் சேர்ந்து பயணித்து சேவையாற்றுவது உறுதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனைத் தொடர்ந்து, மேயர் அவர்களின் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, சொத்துவரி மதிப்பீடு, பெயர் மாற்றம், திருத்தத்திற்கான இறுதி ஆணை அறிவிப்பு, புதிய மற்றும் புதுப்பித்தல் தொழில் உரிமங்கள், தொழில் வரி வழங்கும் அறிவிப்புகளுக்குப் பதிலாக QR Codeனை மேயர் அவர்கள் வெளியிட்டார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டலங்கள், பகுதி அலுவலகங்கள், வார்டு அலுவலகங்கள் மற்றும் சேவைத் துறைகளான சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலகங்கள், தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்கள் மற்றும் அரசு இ-சேவை மையங்கள் ஆகிய இடங்களில் எளிதாக வரி செலுத்துவதற்கு ஏதுவாக பொருத்தப்படும் QR Code அச்சிட்ட அட்டைகளையும்,

பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தில் வாடகைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில், ஒவ்வொரு வாடகைதாரருக்கும் தனித்தனியாக வாடகை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்துவதற்கு ஏதுவாக அந்தந்த கடைகளில் பொருத்தப்படும். QR Code அச்சிட்ட அட்டைகளையும் மேயர் அவர்கள் வெளியிட்டு வழங்கினார்.

இந்நிகழ்வில், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், அவர்கள், நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு (ம) நிதி) திருமதி. சர்பஜெயாதாஸ் நரேந்திரன், துணை ஆணையாளர்கள் வி. சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), ம.பிரதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), மாநகர வருவாய் அலுவலர் கே.பி.பானு சந்திரன், பினாக்கில் வாட்ஸ்அப் சேவை கம்பெனி சௌத் இந்தியா ஹெட் கௌரி சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்கத் திட்டம்!**

## மயிலை பகுதிக்கு முதல்வர் வருகை! கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள்!

சென்னை, ஆக 26-

மயிலை பகுதிக்கு முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைக்க வருகை தர உள்ளனர்.

இது குறித்து பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள் வருமாறு:

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த வட்டக் கழக செயலாளர்கள் மற்றும்

கழக நிர்வாகிகள் கவனத்திற்கு இன்று (26.08.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 7:30 மணி, தூய ரப்பேல்ஸ் பள்ளி சாந்தோம் நெடுஞ்சாலை, சாந்தோம். சென்னை 4. முகவரியில் காலை உணவு திட்டம், அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை துவக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் வருக வருக என அன்புடன் கேட்டு கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ் முரளி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**கருநாடக மாநில தி.மு.க. சார்பில்**

## கழக முப்பெரும் விழா ஆலோசனைக் கூட்டம்!

### மாநில அமைப்பாளர் ந.இராமசாமி வேண்டுகோள்!

பெங்களூரு, ஆக. 26-

கருநாடக மாநிலக் கழக அமைப்பாளர் ந.இராமசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கருநாடக மாநில தி.மு.க சார்பில் இவ்வாண்டு கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிக்கான ஆலோசனைக் கூட்டம் ஆகஸ்டு 31 ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கருநாடக மாநில தி.மு.க. கலைஞரக வளாகம் தளபதி மு.க. ஸ்டாலின் மணி விழா அரங்கத்தில் நடைபெறுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநில தி.மு.க நிர்வாகிகள், முன்னாள் மாநில நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள்,தி.மு.க இளைஞரணி, நிர்வாகிகள், இலக்கிய அணி நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள், தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள் ஆகியோர் குழுவில் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**தி. மு. க. தொழிலாளர் அணி**

## மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 30.08.2025 சனிகிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 12.9.2025 அன்று தொழிலாளர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கூட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-08-2025.

பிடிசி ஜி.செல்வராஜ்,
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி



திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தியாகராயபுரத்தில் 400 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்றனர். இவர்கள் தங்களுக்கு வீட்டு குடியுரிமை பட்டா வழங்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்தனர். அதனை தொடர்ந்து தியாகராய புரத்தை சேர்ந்த 350 குடும்பங்களுக்கு மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் பட்டாவை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வி.ராமநாதன், ஏகா.கார்த்திகேயன், இரா.முருகேசன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, குட்டி (எ) எத்திராஜ், வி.சி.க. உலக முதல்வன், கம்யூனிஸ்ட் தோழர் அம்சா பாய், சக்தி, ஆரோக்கிய ராஜ், இமையவர்மன், ராஜா, ஜோசப், கோபி, விக்டர், ஏசு, பாபு, டெய்லர் மணி, லாரன்ஸ், கருணாநிதி, ரமேஷ், லோகித், மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.